**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**
**அசல் வழக்கு எண்.2/2018**

நீதிமன்ற **தரப்பு சாட்சி: 1**

| | |
|---|---|
| பெயர்: (நீ.சா.1) M.கிருஷ்ணமூர்த்தி | தாலுக்கா: |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | வயது: |

**2026ம்** ஆண்டு பிப்ரவரி **மாதம் 24ம் நாள் செவ்வாய்கிழமை** வாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் திரு.ராமகிருஷ்ணன் அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**நீ.சா.1 முதல் விசாரணை:–**

**1)** இந்த வழக்கில் நான் நீதிமன்ற ஆணையராக இந்நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டிருந்தேன். இருதரப்பினருக்கும் அறிவிப்பு கொடுத்து நான் இந்த வழக்கின் தாவா சொத்தின் பௌதீக சொத்தை 19.07.2019 மற்றும் மற்றும் 21.09.2019 ஆகிய தேதிகளில் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளேன். **நான் தாக்கல் செய்த வரைபடம் நீ.ம.சா.ஆ.1 ஆகவும், அறிக்கை நீ.ம.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. மீண்டும் 26.12.2021ம் தேதியன்று கொடுமுடிதாலுக்கா **நில அளவையர் தாவா சொத்தை அளந்து நில அளவையர் கொடுத்த வரைபடம், நீ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கொடுத்த அறிக்கை நீ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) தாவா சொத்தை இரண்டு முறை நான் அளக்க சென்றபோது வாதியின் தாவா சொத்து குறித்து நான் அறிந்துகொண்டேன் என்றால் சரிதான். தாவா சொத்து ரீ.ச.387/2 கொந்தளம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.2 அறிக்கையில் தாவா சொத்தானது கொடுமுடி வட்டம், கொந்தளம் கிராமம், குமரப்பபுரத்தில் தென்வடல் தார் ரோட்டிற்கு மேல்புறமாக செல்லும் கிழமேல் வண்டிப்பாதை ஆகும் என்றும், அதை எனது வரைபடத்தில் A, B, C, D என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.24 09:09:33 +0530

சொத்தானது ரீ.ச.387/2ல் உள்ள 26 செண்ட் இடம்தான் என்றும், வண்டிப்பாதையில்லை என்று சொன்னால் சரியல்ல.

**2)** நான் 2வது முறை நில அளவையருடன் தாவா சொத்தை சமூகம் உத்தரவுப்படி ரீ.ச.387/2ல் உள்ள சொத்தை அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ரீ.ச 387/2 தாவா சொத்தை நான் அளக்கவில்லை என்றாலும், ரீ.ச.எண்.387/2பி, 1பி மற்றும் 1சி அளந்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ரீ.ச.எண்.387/2 உடைந்துள்ளதாக என்னிடம் தெரிவித்தார்கள். எனக்கு வாதி பூமியை அளக்கச் சொல்லித்தான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். நான் வாதியின் பத்திரம் மற்றும் வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில்தான் அளந்தேன் என்றால் சரிதான். வாதி எவ்வளவு சுவாதீனத்தில் உள்ளார் என்பதை சொல்ல முடியுமா என்றால் முடியாது. பிரதிவாதி எவ்வளவு சுவாதீனத்தில் உள்ளார் என்பதை சொல்ல முடியுமா என்றால் முடியாது.

**3)** நான் தாக்கல் செய்துள்ள அறிக்கைகளுக்கும் நீதிமன்ற உத்தரவிற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை சரியான முறையில் பார்வையிட்டு அளக்கவில்லை என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** நான் தாவா சொத்தின் சொத்து விவரத்தை பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி சொத்து விவரத்தில் வண்டித்தடம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நீ.ம.சா.ஆ.1ல் மேற்படி தடத்தை காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். நான் இரண்டாவது முறை நில அளவையருடன் சென்று பார்த்தபோது தாவா சொத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2ல் உள்ளபடிதான் தாவா சொத்து இருந்தது என்றால் சரிதான்.

**2)** ரீ.ச.எண்.387/2பி, 387/1பி, 387/1சி குறித்து அளக்கச் சொல்லி நீதிமன்றத்தில் இருந்து எனக்கு உத்தரவும் இல்லை என்றால் சரிதான். நான் நீதிமன்ற ஆணையை நீ.ம.சா.ஆ.3 மற்றும் நீ.ம.சா.ஆ.4-ஐ பொறுத்து நிறைவேற்றவில்லை என்றால் சரியல்ல.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.02.24 09:09:37 +0530

நான் வாதி சொத்துக்கு பதிலாக பிரதிவாதி சொத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அறிக்கைகளை செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை பிரதிவாதி தரப்பில்**

**1)** நான் அளந்து தாக்கல் செய்த இடம் வாதி சொத்தா அல்லது பிரதிவாதி சொத்தா என்றால் அது தாவா சொத்து.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.24 09:09:41 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**
**அசல் வழக்கு எண்.2/2018**
**நீதிமன்ற தரப்பு சாட்சி: 2**

| | |
|---|---|
| பெயர்: (நீ.சா.2) சங்கீதா | தாலுக்கா: |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | வயது: |

**2026ம்** ஆண்டு பிப்ரவரி **மாதம் 24ம் நாள் செவ்வாய்கிழமை** வாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் திரு.ராமகிருஷ்ணன் அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**நீ.சா.2 முதல் விசாரணை:-**

நான் தற்போது மொடக்குறிச்சி வட்டத்தில் நில அளவையராக பணியாற்றி வருகிறேன். கடந்த 25.06.2022-ம் தேதியன்று கொடுமுடி வட்டத்தில் நில அளவையராக பணியில் இருந்தபோது நீதிமன்றத்தில் கிடைக்கப்பெற்ற உத்தரவுப்படி நான் நீதிமன்ற ஆணையருடன் சென்று கொந்தளம் கிராமம் ரீ.ச.எண்.387/2 வருவாய்துறை ஆவணங்களின்படி பார்வையிட்டு அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் ஆணையரிடம் ஒப்படைத்தேன். ரீ.ச.எண். 387/2 செக்குபந்திபடி அளந்தபோது ரீ.ச.எண்.387/2 பி, 1சி, 1பிக்குள் வந்தது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நீதிமன்ற உத்தரவுப்படி நீதிமன்ற ஆணையர் கேட்டுக் கொண்டதன்பேரில் ஆணையர் சொன்னபடி தாவா சொத்தை அளவீடு செய்தேன் என்றால் சரிதான். தாவா இடம் முழுவதும் ரீ.ச.எண்.387/2ல் இல்லை என்றால் சரிதான். வாதி, பிரதிவாதி எவ்வளவு சுவாதீனத்தில் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) தாவா சொத்து என்ன சர்வே எண்ணில் உள்ளது என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். சர்வே எண்.387/2. ரீ.ச.எண்.387/2 பி, 1சி, 1பி என குறிப்பிட்டு என்னை அளக்க சொல்லி உத்தரவு இல்லை என்றால்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.24 09:09:46 +0530

சரிதான். தாவா சொத்து என்ன விஸ்தீர்ணம் என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளோனா என்றால் இல்லை. நான் தயார் செய்த அறிக்கையில் அளவுகள் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் வாதி, பிரதிவாதிகளின் பத்திரங்களின் படியும், வருவாய்துறை ஆவணங்களின்படியும் தாவா சொத்தை அளந்தேன் என்றால் சரிதான். ரீ.ச.எண்.387/1பி முழுவதும் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆவணங்களை பரிசீலித்து பார்த்துதான் சொல்ல இயலும். ரீ.ச.எண்.387/1பி பிரதிவாதிக்கு சேர்த்துள்ளேன் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.24 09:09:49 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நீதித்துறை நடுவர், கொடுமுடி.